செய்தி வெளியீடு எண்:330 நாள் : 09.07.2015

செய்தி வெளியீடு

## <u>வக்ஃப் சொத்துக்கள் சர்வே, வக்ஃப் தீர்ப்பாயம் அமைப்பது மற்றும் வாரியம் மற்றும் வக்ஃப் நிறுவனங்கள் மேம்பாடு குறித்த ஆய்வு</u>

புதுடெல்லி, மத்திய அரசின் சிறுபான்மை நல அமைச்சக, செயலர் திரு.அரவிந்த மாயாராம்,இ.ஆ.ப. மற்றும் இணை செயலர் திரு.ராகஷ் மோகன் ஆகியோர் தமிழக அரசு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை முதன்மை செயலாளர் முனைவர் அருள்மொழி,இ.ஆ.ப. மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் திரு.அ.முகம்மது அஸ்லம்,இ.ஆ.ப. ஆகியோர் முன்னிலையில் வக்ஃப் சொத்துக்கள் சர்வே, வக்ஃப் திருத்த சட்டத்தின்படி வக்ஃப் தீர்ப்பாயங்கள் அமைப்பது, வக்ஃப் வாரிய பதிவேடுகளை கணிணிமயமாக்குதல் மற்றும் ‘‘நவாட்கோ’’ திட்டத்தின்கீழ் வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்வது ஆகியவை குறித்து தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மை செயல் அலுவலர் திரு.கா.ரசீத் அலி மற்றும் அலுவலர்களிடத்தில் ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வில் வக்ஃப் வாரிய உறுப்பினர் திரு.சலாவுதீன் முஹம்மது அயூப், அரசு இணை செயலர் திரு.முடிசூடும் பெருமாள், வாரிய மதிப்புறு சட்ட அலுவலர் திரு.நாகூர் மீரான், வாரிய உதவி செயலாளர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேற்கண்ட செய்தியை தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மை செயல் அலுவலர் திரு.கப.ரசீத் அலி தெரிவித்துள்ளார்.

**கா.ரசீத் அலி,**
**முதன்மை செயல் அலுவலர்.**

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**